Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 93 | உள்ளூர் - 03.04.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 93 | வெளியூர் - 04.04.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**திருமணத்திற்குப் பின் இவர்களுக்கு சாதகமான மாற்றங்கள்?** | **233 தலைமைக் காவலர் காலியிடங்கள்!** | **புதுச்சேரியில் பிரதமர் ரோடு ஷோ!** | **அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!**



சென்னையில் பிரதமர் நரேந்திர மோடி நடத்தும் ஆலோசனைக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்க அண்ணாமலைக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். பிரதமர் மோடி ஆலோசனைக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என பா.ஜ.க தேசியத் தலைமை அறிவுறுத்தல் காரணமாக கேரளாவில் இருந்து சென்னை விரைகிறார் அண்ணாமலை.

## புதுச்சேரியில் பிரதமர் ரோடு ஷோ!

புதுச்சேரி, ஏப். 03–

புதுச்சேரி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற 9–ந்தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பா.ஜனதா, என்.ஆர். காங்கிரஸ், அ.தி.மு.க., லட்சிய ஜனநாயக கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டி யிடுகின்றன. புதுவையில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி இன்று (வெள்ளிக்கிழமை) புதுவையில் 'ரோடு ஷோ' நடத்துகிறார். இதற்காக அவர் டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் சென்னை வருகிறார். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் புதுச்சேரி விமான நிலையத்துக்கு மாலை 4.15 மணிக்கு வருகிறார். அங்கு அவருக்கு முதல்–அமைச்சர் ரங்கசாமி மற்றும் பா.ஜனதா நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.



**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

பின்னர் கார் மூலம் அஜந்தா சந்திப்புக்கு வருகிறார். அங்கிருந்து திறந்த வாகனத்தில் ஏறி 'ரோடு ஷோ' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுகிறார். அஜந்தா சிக்னல் சந்திப்பில் தொடங்கும் இந்த ரோடு ஷோ நிகழ்ச்சி ராஜா தியேட்டர் சந்திப்பு வரை நடைபெற உள்ளது. ரோடுஷோவை முடித்து விட்டு மீண்டும் புதுச்சேரி விமான நிலையத்திற்கு திரும்பும் அவர் மாலை 5.50 மணிக்கு ஹெலிகாப்டரில் புறப்பட்டு சென்னை செல்கிறார். பிரதமரின் வருகையை முன்னிட்டு புதுவையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

**மது விற்பனை செய்ய தடை**

டெல்லியில் இருந்து பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள், சிறப்பு பாதுகாப்பு குழுவினர் புதுச்சேரி வந்துள்ளனர். விமான நிலையம் முதல் ரோடுஷோ நடைபெறும் இடம் வரை சிறப்பு பாதுகாப்பு குழுவினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. சாலையின் இருபுறமும் பேரிகார்டு அமைக்கப்பட்டு ள்ளது.இந்த பகுதியில் துணை ராணுவ படையினர், போலீசார், வெடிகுண்டு நிபுணர்கள் மோப்பநாய், மெட்டல் டிடெக்டர் உதவியுடன் சோதனை நடத்தி வருகின்றனர்.

பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு இன்று புதுவையில் 2 ஆயிரம் துணை ராணுவ படையினர், 1,000 போலீசார் என 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நகர பகுதியில் போக்குவரத்தும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையே சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பொருட்டு புதுச்சேரியில் 8 பகுதிகளில் இன்று காலை முதல் இரவு 8 மணி வரை மதுபான, சாராயக்கடைகள், ஓட்டல்களில் உள்ள மதுபான விற்பனை பிரிவு ஆகியவற்றில் மது விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை சாலைஏர்போர்ட் சாலையில் தொடங்கி லதா ஸ்டீல், கிழக்கு கடற்கரை சாலை, சிவாஜி சிலை சந்திப்பு, கருவடிக்குப்பம், ஏழை மாரியம்மன் கோவில், அஜந்தா சந்திப்பு வரையும், எஸ்.வி. படேல் சாலையில் கவர்னர் இல்லம் முதல் ஆனந்தா இன் ஓட்டல், அண்ணாசாலை, ஒதிய ஞ்சாலை சந்திப்பு, புஸ்சி வீதி, பழைய கோர்ட்டு, கடற்கரை சாலை, கவர்னர் மாளிகை வரை மதுக்கடைகளை மூட வேண்டும். இதனை மீறி விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்படும் என்று கலால் துறை துணை ஆணையர் மேத்யூ பிரான்சிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## மதுரை விமான நிலையத்தில் இமிகிரேஷன் சோதனை மேற்கொள்ளப்படும் - மத்திய மந்திரி தகவல்!

புதுடெல்லி, ஏப். 03–

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது விருதுநகர் எம்.பி. மாணிக்கம் தாகூர், மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறி வித்ததற்கு நன்றி தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் பேசுகையில், "மதுரைக்கு அதிகளவில் வெளிநாட்டு விமானங்கள் வந்து செல்வதை உறுதிப்படுத்த, வெளிநாட்டு விமான போக்குவரத்திற்கான இருதரப்பு சேவைகள் ஒப்பந்தத்தின் கீழ், மதுரை சர்வதேச விமான நிலையத்தையும், ஒரு முக்கிய முனையமாக சேர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமா? அவ்வாறு செய்தால், தமிழகத்தின் தென் பகுதிகளில் சுற்றுலா, ரெயில் மற்றும் பொருளாதாரம் வளர்ச்சி பெறும்" என்று கூறினார்.

அதற்கு சிவில் விமான போக்குவரத்து மந்திரி ராம் மோகன் நாயுடு பதில் அளித்தார். அவர் கூறுகையில், "தமிழ்நாட்டின் மீது கொண்டுள்ள அக்கறை காரணமாகவே மதுரை சர்வதேச விமான நிலையம் அமைவற்கு ஒப்புதல் அளிக்க முடிந்தது. இதன்மூலமாக மதுரை மக்களின் நீண்டகால விருப்பத்தை நிறைவேற்றி உள்ளோம். மதுரையை ஒரு சர்வதேச விமான நிலையமாக மாற்றியதால் ஒருவர் அனைத்து இமிகிரேஷன் (குடிவரவு) சோதனைகளையும் மதுரையிலேயே முடித்துவிட்டு விமானத்தில் ஏறலாம். விமான நிலையத்துக்கு உள்ளேயே பயணத்தை இடைநிறுத்தி, சர்வதேச இணைப்புக்கும் உள்நாட்டு நகரங்களுக்கும் செல்லலாம். இது மதுரை மக்களுக்கு வழங்கும் மற்றொரு வசதி ஆகும்" என்று ராம் மோகன் நாயுடு கூறினார்.



## களத்தில் அடிக்கடி காணாமல் போகும் விஜய்!

தவெக தலைவர் நடிகர் விஜய்யின் பிரசார ஸ்டைல், ஓட்டுக்களை பெற்றுத் தருமா அல்லது மற்ற கட்சிகளுக்கு சாதகமாக அமையுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. மார்ச் 30ம் தேதி தமிழக தேர்தல் வேட்பு மனு ஆரம்பம் ஆனது. அன்றே படுவேகத்தில் சென்னை பெரம்பூர் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார் விஜய். சில கட்சிகளில் வேட்பாளர்களே அறிவிக்கப்படாதபோது விஜய் காட்டிய வேகம் பலருக்கு வியப்பை ஏற்படுத்தியது. உண்மையில் "சீரியசாக" அரசியல் செய்வார் போலவே என்ற கருத்தை ஏற்படுத்தியது. எல்லாம் கொஞ்சம் நேரம் தான். அதன் பிறகு காட்சியே மாறியது. பெரம்பூரிலும் கொளத்தூரிலும் மதியம் வரை பிரசாரம் செய்த விஜய், திடீரென பிரசாரத்தை ரத்து செய்துவிட்டு பனையூர் வீட்டுக்கு திரும்பி பதுங்கிக்கொண்டார்.

அங்கிருந்து ஒரு அறிக்கை மட்டும் வந்தது. போலீசார் போதிய பாதுகாப்பு கொடுக்காததால் பிரசாரத்தை ரத்து செய்கிறேன்" என்று விஜய் அறிவித்தார். சரி போனால் போகுது, மறுநாளாவது பிரசாரம் செய்ய வருவார்" என விஜய் ரசிக கண்மணிகள் காத்திருந்தனர். மறுநாளும் போச்சு, அதற்கு அடுத்த நாளும் போச்சு.



அதாவது ஏப்.1 வரை இப்படியே ஓடிப்போச்சு. திடீரென ஏப்.2ம் தேதி வீட்டை விட்டு வெளியே வந்த விஜய், திருச்சி கிழக்கில் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு, அங்கேயே பிரசாரமும் செய்தார். அப்போதாவது தங்களையும் அழைத்து வாக்காளர்களுக்கு விஜய் அறிமுகம் செய்து வைப்பார் என அவரது கட்சி வேட்பாளர்கள் காத்திருந்தனர். ஆனால் அப்படிப்பட்ட சம்பவத்திற்கெல்லாம் விஜய் இடம் கொடுக்கவில்லை.

தவெக வேட்பாளர்களை "அம்போ"வென விட்டு விட்டு சென்னைக்கு பறந்தார். அதன் பிறகு விஜய்யிடம் இருந்து பிரசாரம் பற்றிய எந்த தகவலும் இல்லை. விஜய் பாணி வித்தியாசமான பாணி''யாக இருக்கிறதே. நமக்கு இது நல்லது தான்" என்று சந்தோசப்படுகின்றனர் மற்ற கட்சி வேட்பாளர்கள். ஏற்கனவே ஆண்ட கட்சி, இப்போது ஆளும் கட்சிக்கு மாற்றாக வருவேன் என்று கூறும் விஜய், பிரசாரத்திலும் அவர்களுக்கு மாற்றாக இருக்க வேண்டாமா என அவரது ரசிகர்கள் கேட்கின்றனர்.

## பெரிய தப்பு பண்ணிட்டீங்க டிரம்ப்..!

# வளைகுடாவில் 8 பாலங்கள் டார்கெட்.. ஈரான்..! பேச்சு வார்த்தை நடத்தாவிட்டால்

## மேலும் அழிவுகள் – டிரம்ப்!!

அமெரிக்கா, ஏப். 03–

சமீபத்திய அமெரிக்க–இஸ்ரேலியத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக மத்திய கிழக்கு முழுவதும் உள்ள 8 முக்கியப் பாலங்கள் இலக்காகக்கூடும் என்ற பட்டியலை ஈரான் வெளியிட்டுள்ளது. கராஜில் உள்ள பி1 பாலத்தை பகுதியளவு சேதப்படுத்திய ஒரு தாக்குதலைத் தொடர்ந்து, ஈரானின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது..





எதிர்காலத்தில் நிகழக்கூடிய எந்தவொரு தாக்குதலுக்கும் இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படையே (IRGC) பொறுப்பு என்று மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது, இது தற்போதைய மோதலுக்குப் பதிலடி கொடுக்கும் ஒரு சாத்தியமான நடவடிக்கையைச் சுட்டிக்காட்டுகிறது.

வளைகுடா மற்றும் ஜோர்டான் முழுவதும் சிறப்பித்துக் காட்டப்பட்ட பாலங்கள்

ஈரானியப் பட்டியலில் வளைகுடா மற்றும் ஜோர்டானில் உள்ள முக்கிய உள்கட்டமைப்புகள் அடங்கும்:

ஷேக் ஜாபர் அல்–அஹ்மத் அல்–சபா கடல் பாலம், குவைத்

ஷேக் சயீத் பாலம், ஐக்கிய அரபு அமீரகம்

அல் மக்தா பாலம், ஐக்கிய அரபு அமீரகம்

ஷேக் கலீஃபா பாலம், ஐக்கிய அரபு அமீரகம்

கிங் ஃபஹத் தரைப்பாலம் (சவுதி அரேபியாபஹ்ரைன்)

கிங் ஹுசைன் பாலம், ஜோர்டான்

டாமியா பாலம், ஜோர்டான்

அப்தூன் பாலம், ஜோர்டான்

அனடோலுவால் அறிவிக்கப்பட்ட இந்தப் பட்டியல்கள், இப்பகுதியில் உள்ள முக்கிய போக்குவரத்து மற்றும் பொருளாதார மையங்களை ஈரான் தனது செல்வாக்கைப் பயன்படுத்தக்கூடிய சாத்தியமான இடங்களாகக் கருதுவதைக் காட்டுகின்றன.

ஈரானின் பி1 பாலம் தகர்க்கப்பட்டது

ஈரானின் மிக உயரமான பாலமான, 136 மீட்டர் உயரமுள்ள பி1 பாலம்,டெஹ்ரானை மேற்கு கராஜுடன் இணைக்கும் நோக்கில் கட்டுமானத்தில் இருந்தது. வியாழக்கிழமை நடந்த தாக்குதலில் இப்பாலம் பகுதியளவு சேதமடைந்ததில் பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதலில் 8 பேர் உயிரிழந்ததாகவும், 95 பேர் காயமடைந்ததாகவும் கோத்ரதுல்லா செய்ஃப் உறுதிப்படுத்தினார். இந்த தாக்குதல் தொடர்பாக சமூக வலைதளங்களில் பரவும் வீடியோக்களில் பாலத்தின் பெரும் பகுதிகள் இடிந்து விழுவதை பார்க்க முடிகிறது..

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பாலத்திலிருந்து புகை எழும் காட்சிகளைப் பகிர்ந்து, ஈரான் பேச்சுவார்த்தை நடத்தாவிட்டால் மேலும் அழிவுகள் ஏற்படும் என எச்சரித்தார். "ஈரானின் மிகப்பெரிய பாலம் இடிந்து விழுகிறது, இனி ஒருபோதும் பயன்படுத்தப்படாது, இன்னும் பல அழிவுகள் தொடரும்!" என்று அவர் எழுதினார்.

**ஈரான் கண்டனம்**

பொதுமக்கள் மற்றும் கட்டி முடிக்கப்படாத கட்டிடங்கள் மீதான தாக்குதலை அப்பாஸ் அராக்சி கண்டித்தார். இதுபோன்ற நடவடிக்கைகள் ஈரானை சரணடையச் செய்யாது என்று X தளத்தில் பதிவிட்டார். "இது குழப்பத்தில் இருக்கும் ஒரு எதிரியின் தோல்வியையும் தார்மீக வீழ்ச்சியையும் மட்டுமே காட்டுகிறது," என்று அவர் கூறினார்.

## அனைத்து தொகுதி திமுக நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் ஆலோசனை!

சென்னை, ஏப். 03–

அனைத்து தொகுதி திமுக நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் ஆலோசனை நடத்தி வருகிறார். தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் வரும் 23ம் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30ம் தேதி தொடங்கியது. தேர்தலை சந்திக்கும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகின்றன. இந்த தேர்தலில் ஆளுங்கட்சியான திமுக மெகா கூட்டணியை அமைத்துள்ளது. இந்த கூட்டணியில் காங்கிரஸ், தேமுதிக, விசிக, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மதிமுக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி, கொமதேக, எஸ்டிபிஐ, மஜக, முக்குலத்தோர் புலிப்படை, தமிழர் தேசம் உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன.



திமுக தனது கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு 70 தொகுதிகளை வழங்கியுள்ளது. மீதியுள்ள 164 இடங்களில் திமுக போட்டியிடுகிறது. அதே நேரத்தில் மதிமுக 4, மமக 2, கொமதேக 2, எஸ்டிபிஐ, மஜக, முக்குலத்தோர் புலிப்படை, தமிழர் தேசம் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட 12 இடங்களில் 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிடுகின்றன. இதன் மூலம் 176 தொகுதிகளில் உதயசூரியன் சின்னம் களம் காண்கிறது. இந்நிலையில் அனைத்து தொகுதி திமுக நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் ஆலோசனை நடத்தி வருகிறார். திமுக மாவட்டச் செயலாளர்கள், வேட்பாளர்கள், பகுதி, நகரம், ஒன்றிய செயலாளர்கள் பங்கேற்றுள்ளனர். சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனை வழங்குகிறார்.

## பிரமாண பத்திரத்தில் மாறுபட்ட தகவல்கள்; விஜய் வேட்பு மனு என்ன ஆகும்?

சென்னை, ஏப். 03–

பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் வேட்பு மனுவுடன் விஜய் இணைத்துள்ள பிரமாண பத்திரத்தில் வழக்கு தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய் திருச்சி கிழக்கு, பெரம்பூர் ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இந்த இரண்டு தொகுதிகளிலும் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை விஜய் சமர்ப்பித்து உள்ளார். பெரம்பூர் தொகுதி வேட்புமனுவில் குற்ற வழக்கு இல்லையென விஜய் தெரிவித்து இருந்தார்.



திருச்சி கிழக்கிற்கான வேட்புமனுவில் பெரம்பூர் பிரசாரத்தின் போது மார்ச் 30ம் தேதி ஒரு வழக்கும், 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மதுரை மாநாடு தொடர்பான ஒரு வழக்கும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஒரே வேட்பாளர் இரு வெவ்வேறு தொகுதிகளில் சமர்ப்பித்துள்ள வேட்புமனுக்களில் இவ்வாறு மாறுப்பட்ட, முரண்பட்ட தகவல்கள் இருப்பது, சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இது பற்றி கட்சியினரிடம் விசாரித்த போது, ''பழைய வழக்கு இருப்பது பின்னர் தான் தெரியவந்தது. பிரமாணப்பத்திரத்தில் மாறுதல் செய்வதற்கும், கூடுதலாக சேர்ப்பதற்கும் இன்னும் அவகாசம் இருக்கிறது. இது ஒரு சிக்கலே இல்லை'' என்றனர். பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்பு மனுவில் வழக்கு விபரத்தை தெரிவிக்கவில்லை என்றும், அதனால் விஜய் மனு தள்ளுபடியாகும் என்றும் சில தொலைக்காட்சிகள் செய்தி வெளியிட்டன. ஆனால் சட்டப்படி அவ்வாறு தள்ளுபடியாக வாய்ப்பு இல்லை என்று விபரம் அறிந்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

தலையங்கம் மதுரை மணி
வெள்ளிக்கிழமை 03.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 20-ம் தேதி

## போரால் அடுத்தடுத்து கிளம்பும் பூதம்!!



ஈரானில் ஒரு மாத காலத்திற்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்கு போர் தீவிரமடைய போகிறது என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார். ஈரான், எதிரிகள் சரணடையும் வரை நாங்கள் போரை தொடர்வோம் என அறிவித்துள்ளது. ஈரான் போர் ஏற்கனவே பல்வேறு நாடுகளிலும் பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டது. ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் கடுமையான பெட்ரோல் , டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை பல மடங்கு உயர்வு கண்டிருக்கிறது. பிலிப்பைன்ஸில் எனர்ஜி லாக்டவுன் அறிவிக்கப்பட்டு விட்டது. ஆஸ்திரேலியாவில் பொதுமக்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும் என அரசு அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறது.

இத்தகைய சூழலில் இந்தியாவைப் பொறுத்தவரை தற்போதைக்கு பெட்ரோல் டீசலுக்கு எந்த ஒரு தட்டுப்பாடும் இல்லை. தனியார் எண்ணெய் நிறுவனங்கள் மட்டும் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியுள்ளன. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் சாதாரண பெட்ரோல், டீசல் விலையில் இதுவரை கை வைக்கவில்லை. எல்பிஜி பொறுத்தவரை வணிகப் பயன்பாட்டு சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது, வீட்டு பயன்பாட்டு சிலிண்டர் விலை பெருமளவில் உயர்த்தப்படவில்லை. அதே வேளையில் வீட்டு பயன்பாட்டு சிலிண்டர் விநியோகத்திற்கு தான் எண்ணெய் நிறுவனங்கள் முன்னுரிமை தந்த வண்ணம் இருக்கின்றன. அதாவது ஈரான் போர் நேரடியாக சாமானிய மக்களை பாதிக்க கூடாது என்பதில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மிக கவனமாக எடுத்து வருகிறது. ஆனால் உண்மையான பிரச்சனையே இனிமேல் தான் தொடங்கப் போகிறது.

கச்சா எண்ணெய் விலை உயர்வு , அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவு ஆகிய இரண்டும் இந்தியாவில் பல்வேறு அத்தியாவசிய பொருட்கள் விலையை உயர்த்தும் என நுவாமா நிறுவனம் கூறி இருக்கிறது. குறிப்பாக புதிய நிதியாண்டு தொடங்கி இருக்கக்கூடிய சூழலில் அடுத்து வரக்கூடிய சில வாரங்களிலேயே இந்தியாவில் எஃப்எம்சிஜி நிறுவனங்கள் பல்வேறு பொருட்களின் விலைகளை உயர்த்தப் போகின்றன என தெரிவித்திருக்கிறது.

அதாவது பல்வேறு மூலப்பொருட்களின் விலை உயர்ந்திருப்பதால் பல்வேறு பொருட்களின் விலைவாசி மூன்றிலிருந்து நான்கு சதவீதம் வரை உயர்த்தப்பட வாய்ப்பு இருப்பதாக தெரிவித்திருக்கிறது. சமையல் எண்ணெய், சோப்பு மற்றும் டிடர்ஜென்ட், பெயிண்ட் ஆகியவற்றின் விலை பெருமளவில் உயர வாய்ப்புள்ளதாக தெரிவித்திருக்கிறது. இந்த பொருட்களை தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பதும் பேக்கேஜிங் கட்டணம் உயர்ந்திருப்பதுமே இதற்கு காரணம் என நுவாமா நிறுவனம் கூறியிருக்கிறது. பல்வேறு பொருட்களின் உற்பத்தி செலவு 20% வரை உயர்வு கண்டிருப்பதால் நிறுவனங்கள் இந்த விலை உயர்வை மக்களின் மீது சுமத்த தயாராகி இருப்பதாக நுவாமா நிறுவனம் கூறுகிறது. ஆசியன் பெயிண்ட்ஸ், பெர்கர் பெயிண்ட்ஸ், டாபர், இமாமி போன்ற நிறுவனங்கள் தங்கள் பிராண்ட் பொருட்கள் விலையை இந்த மாத மத்தியிலேயே உயர்த்த திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது ஒரு புறம் இருக்க ஈரான் போர் இந்தியாவின் இண்டர்நெட் இணைப்புக்கும் பிரச்சினை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. டிஜிட்டல் ரீதியிலான இணைப்புக்கு கடலுக்கு அடியில் போடப்பட்டு இருக்கக்கூடிய கேபிள் இணைப்புகள் தான் முக்கியம். சர்வதேச அளவிலான 99% இண்டர்நெட் டிராபிக் இந்த கேபிள்கள் மூலம் தான் கிடைக்கிறது. தற்போதைக்கு ஈரான் இந்த கேபிள் உள்கட்டமைப்புகள் மீது எந்த ஒரு தாக்குதலையும் நடத்தவில்லை. ஆனால் எதிர் வரக்கூடிய நாட்களில் இன்டர்நெட் இணைப்பு கேபிள்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலோ இணைப்பு துண்டிக்கப்பட்டாலும் இந்தியாவில் பெரும் அளவில் இன்டர்நெட் முடங்கும் அபாயம் ஏற்படலாம். செங்கடல் வழியாக வரக்கூடிய கேபிள்கள் சேதமடைந்தால் அதனை சரி செய்வதற்கு ஓராண்டு காலம் தேவைப்படும் என சொல்லப்படுகிறது. உடனடியாக பெரிய அளவில் இண்டர்நெட் முடக்கம் இல்லை என்றாலும் இண்டர்நெட் இணைப்பு தாமதமாக இருக்கும் என சொல்லப்படுகிறது.

## அட்டர்னி ஜெனரல் பேம் போண்டி பதவி நீக்கம்!





அமெரிக்கா, ஏப். 03–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தனது அட்டர்னி ஜெனரல் பேம் போண்டியை (Pam Bondi) அதிரடியாகப் பதவியிலிருந்து நீக்கியுள்ளார்.

பேம் போண்டி–க்குப் பதிலாக டெபுடி அட்டர்னி ஜெனரல் டாட் பிளான்ச் தற்காலிக அட்டர்னி ஜெனரலாகச் செயல்படுவார் என்று டிரம்ப் அறிவித்துள்ளார். ஓராண்டு காலம் அட்டர்னி ஜெனரலாகப் பணியாற்றிய பேம் போண்டி, தற்போது தனியார் துறையில் புதிய பொறுப்பை ஏற்கவுள்ளதாக டிரம்ப் தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# பைனான்ஸ் தொழில் செய்பவர்களுக்கு தமிழ்நாடு அரசு போட்ட கடிவாளம்! முக்கிய அறிவிப்பு!!

புதுடெல்லி, ஏப். 03–

பைனான்ஸ் தொழில் செய்பவர்களுக்கு தமிழ்நாடு அரசிடமிருந்து ஒரு முக்கிய அறிவிப்பு வெளயாகியுள்ளது.

**முழு விவரம்**





தமிழ்நாட்டில் பைனான்ஸ் தொழில் செய்பவர்களுக்கும், கடன் வாங்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும், விவசாயிகளுக்கு அரசு (Tamil Nadu Government) ஒரு முக்கிய அறிவுறுத்தலைக் கொடுத்துள்ளது. அது என்னவென்றால், தமிழ்நாடு பணம் கடன் வழங்கும் நிறுவனங்கள் (கட்டாய வசூல் நடவடிக்கைகளைத் தடுக்கும்) சட்டம் மற்றும் தமிழ்நாடு பணம் கடன் வழங்கும் நிறுவனங்கள் (கட்டாய வசூல் நடவடிக்கைகளைத் தடுக்கும்) விதிகள், 2025 அமலுக்கு வந்துள்ளன.

அதன்படி, தமிழ்நாட்டில் இயங்கி வரும் அனைத்துப் பணக் கடன் வழங்கும் நிறுவனங்களும் பதிவு செய்துகொள்வதை அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கம். மாநிலத்தில் செயல்பட்டு வரும் சிறு குறு கடன் நிறுவனங்கள், கடன் கொடுக்கும் தொழில் செய்யும் தனிநபர்கள் உள்ளிட்ட அனைவரின் செயல்பாடுகளையும் இச்சட்டம் ஒழுங்குபடுத்தும்.

கடன் நிறுவனங்கள் கொடுத்த வசூலிக்கும்போது கடைபிடிக்கும் வற்புறுத்தல் சார்ந்த இன்னல்களிலிருந்து பொதுமக்களை, குறிப்பாக விவசாயிகள், பெண்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளிட்ட பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினர் மற்றும் தனிநபர்களுக்கு இச்சட்டம் பாதுகாப்பு கொடுக்கும்.

எனவே, பைனான்ஸ் தொழிலில் ஈடுபடும் அனைவரும் கட்டாயம் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படக்கூடிய செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் பெற்றே ஆக வேண்டும். ஒருவேளை இந்த சான்றிதழ் பெறவில்லை என்றால் எவ்விதமான பணக் கடன் வழங்கும் வணிகச் செயல்பாடுகளையும் மேற்கொள்ளக்கூடாது. இந்த அறிவிப்பை நீலகிரி மாவட்ட ஆட்சியர் குறிப்பாக அம்மாவட்டத்தினருக்கு அறிவித்துள்ளார். ஆனால், தமிழ்நாடு முழுவதும் இச்சட்டம் பொருந்தும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பைனான்ஸ் தொழில் செய்பவர்கள் இப்பதிவிற்கான விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் தேவையான விவரங்கள் மற்றும் முறையான ஆவணங்களுடன் அரசு அறிவித்துள்ள இணையதளமுகவரி https://tnmonerlending.tn.gov.in பட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். இணைய விண்ணப்பத்தின் போது, பதிவிற்கான கட்டணம் ரூ.10,000/– (பத்தாயிரம் ரூபாய் மட்டும்) ஆன்லைனில் செலுத்தப்பட வேண்டும்.

இக்கட்டணம் திரும்ப வழங்கப்படாது. மேற்படி விண்ணப்பங்கள் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவரால், மேற்குறிப்பிட்டுள்ள சட்ட விதிகளின் கீழ் பரிசீலனை செய்யப்பட்டு,உரிய காலத்திற்குள் பதிவுச்சான்றிதழ் வழங்கப்படும்.

இந்த பதிவுச் சான்றிதழ் மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். பதிவுச்சான்றிதழ் காலாவதியாவதற்கு குறைந்தது 60 நாட்களுக்கு முன்னதாக, சான்றிதழை புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் புதுப்பித்தலுக்கான கட்டணம் ரூ.10,000/– (பத்தாயிரம் ரூபாய் மட்டும்) ஆன்லைனில் செலுத்தி, உரிய படிவத்தில் (மேற்படி விதிகளின் இணைப்புப்படிவம்–IV), மேற்படி இணைய தளம் வாயிலாக விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், கடன்களுக்கான பிணையம், முறையான ஆவணங்களைப் பராமரித்துப் பாதுகாத்தல், ஆண்டு அறிக்கைகளைத் தாக்கல் செய்தல், அனைத்துத் திருப்பிச் செலுத்துதல்களுக்கும் ரசீதுகளை வழங்குதல், கடன் வழங்கும் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் அறிக்கைகளைச் சரியான நேரத்தில் சமர்ப்பித்தல் போன்றவற்றில் மேற்படி சட்டம் மற்றும் விதிகளில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும், கடன் வசூலின் போது கடன் பெற்றவர்கள் அல்லது அவர்களின் குடும்பத்தினர்மீது எந்தவிதமான மிரட்டல், தொல்லை அல்லது வற்புறு த்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக் கூடாது. இத்தகைய். செயல்கள் கண்டறியப்பட்டால், சம்பந்த ப்பட்டவர்களின்மீது நடவடி க்கைகள் மேற்கொள்ளப்படும். சட்ட விதிகளை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், பொதுமக்களும், கடன்பெறுபவர்களும் பதிவு செய்யப்பட்ட பணம் கடன் வழங்கும்நிறுவனங்களுடனே பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுமாறும், இச்சட்ட விதிகள் தொடர்பாக ஏதேனும் முறைகேடுகள் கண்டறியப்பட்டால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அல்லது காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் புகார்களை அளிக்குமாறு நீலகிரி மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# எழும்பூர் ரயில் சேவை மீண்டும் தொடக்கம்; பணியை முன்பே முடித்து தெற்கு ரயில்வே அசத்தல்!



சென்னை, ஏப். 03–

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து நாளை முதல் வழக்கமன புறநகர் மின்சார ரயில் சேவைகள் தொடங்கும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுசீரமைப்பு பணிகள் மிக விரைவாக முடிக்கப்பட்டதால், முன்கூட்டியே சேவை தொடங்கப்படுகிறது. எழும்பூரில் நடைமேடை 10, 11இல் பணிகள் நடந்து வரும் நிலையில் பிப்ரவரி 20 முதல் புறநகர் ரயில் சேவை நிறுத்தப்பட்டது. அனைத்து பணிகளும் திட்டமிட்ட நேரத்துக்கு முன்பாகவே முடிக்கப்பட்டதால் ஏப்ரல் 3ஆம் தேதி முதல் ரயில் சேவை தொடங்குகிறது.

இதுதொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில்,

புறநகர் பயணிகளுக்கு ஒரு பெரும் நிவாரணமாக, தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம், திட்டமிடப்பட்டிருந்த 05.04.2026 என்ற தேதிக்கு முன்னதாகவே, 03 ஏப்ரல் 2026 (வெள்ளிக்கிழமை) அன்று 00:00 மணி முதல் சென்னை எழும்பூர் நிலையத்தில் புறநகர் ரயில் சேவைகளை மீண்டும் தொடங்கியுள்ளது. நடைமேடை 10 மற்றும் 11–ல் புனரமைப்புப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டதன் காரணமாக இந்த முன்கூட்டியே சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

நடைமேடை 10 மற்றும் 11–ல் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, 20 பிப்ரவரி 2026 முதல் 05 ஏப்ரல் 2026 வரை ரயில் பாதை முடக்கம்/ மின்சார முடக்கம் அனுமதிக்கப்பட்டிருந்தது. அனைத்துப் பணிகளும் திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்பே வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இயல்பான புறநகர் ரயில் சேவைகள் முன்கூட்டியே மீண்டும் தொடங்குவதற்கு வழிவகுக்கும் வகையில், அந்த முடக்கம் முன்கூட்டியே ரத்து செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 27 பிப்ரவரி 2026 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தற்காலிக புறநகர் ரயில் கால அட்டவணை திரும்பப் பெறப்படுகிறது. 20 பிப்ரவரி 2026–க்கு முன்னர் நடைமுறையில் இருந்த வழக்கமான புறநகர் ரயில் கால அட்டவணை, வார நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் ஆகிய இரண்டிற்கும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படு கிறது. சென்னை கடற்கரை – தாம்பரம் – செங்கல்பட்டு – அரக்கோணம் வழித்தடத்தில், தினசரிப் பயணிகளுக்குத் தடையற்ற மற்றும் திறமையான இணைப்பை மீண்டும் வழங்கும் வகையில், அனைத்து EMU/MEMU சேவைகளும், நிறுத்தங்கள் மற்றும் இயக்க முறைகள் உட்பட, தடைக்கு முந்தைய ஏற்பாடுகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் அதே வேளையில் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், சென்னை கோட்டத்தின் பல்வேறு துறைகளின் அர்ப்பணிப்பு மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளை இந்தப் பணிகள் முன்கூட்டியே நிறைவு செய்திருப்பது பிரதிபலிக்கிறது. இந்தத் தடைக்காலத்தில் பொறுமையுடனும், புரிதலுடனும், தொடர்ச்சியான ஆதரவுடனும் இருந்த பயணிகளுக்குத் தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. பயணிகள் 03 ஏப்ரல் 2026 (வெள்ளிக்கிழமை) அன்று 00:00 மணி முதல் வழக்கமான கால அட்டவணையைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# ரூ.180 கோடி இமாலய மோசடி : எவரெஸ்டில் சுற்றுலா பயணிகளைக் குறிவைத்து கோடிகள் குவித்த கும்பல்...!



எவரெஸ்டில் ட்ரெக்கிங் செல்ல விரும்பும் சுற்றுலா பயணிகளைக் குறிவைத்து சுமார் $20 மில்லியன் (₹180 கோடி) காப்பீட்டு மோசடி நடந்ததாக காவல்துறை மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்ததை அடுத்து நேபாள நாட்டின் சுற்றுலா துறை மிகப் பெரிய சர்ச்சையில் சிக்கியுள்ளது.

சில ட்ரெக்கிங் வழிகாட்டிகள், ஏஜென்சிகள், ஹெலிகாப்டர் நிறுவனங்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் இணைந்து இந்த மோசடியை நடத்தியுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் உணவில் பேக்கிங் சோடா போன்ற பொருட்களை கலந்து, உயரமான இடங்களில் ஏற்படும் "அல்டிட்யூட் சிக்க்னஸ்" போல தோன்றும், வாந்தி, மயக்கம் போன்ற உடல்நல பிரச்சனைகளை ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது.


உடல்நலம் பாதிக்கப்பட்ட பயணிகளை அவசர ஹெலிகாப்டர் மூலம் கீழே கொண்டு செல்ல வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து, தேவையற்ற மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். பின்னர் தங்கள் வலையமைப்பில் இணைந்த மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு பரிசோதனைகள் மேற்கொண்டு தவறான அல்லது மிகைப்படுத்தப்பட்ட நோயறிதல்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த முறையில் போலியான மருத்துவ அறிக்கைகள், ஹெலிகாப்டர் செலவினங்கள் மற்றும் போலி பில்கள் தயாரித்து காப்பீட்டு நிறுவனங்களிடம் பணம் பெற்றுள்ளனர். இதன் மூலம் சுமார் $19.69 மில்லியன் தொகை மோசடி செய்யப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக 32 பேர் மீது நேபாள அதிகாரிகள் வழக்கு பதிவு செய்துள்ளனர். இதில் ட்ரெக்கிங் நிறுவன உரிமையாளர்கள், வழிகாட்டிகள், ஹெலிகாப்டர் ஆபரேட்டர்கள் மற்றும் மருத்துவர்கள் அடங்குவர்.

எவரெஸ்ட் பகுதியில் ஹெலிகாப்டர் மீட்பு மிகவும் அவசியமானதாய் இருந்தாலும், அதன் அதிக செலவு மற்றும் அவசரத் தன்மை காரணமாக சரிபார்ப்பு குறைவாக இருப்பது இந்த மோசடிக்கு வழிவகுத்துள்ளது.

இந்த சம்பவம் சுற்றுலா பயணிகளின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும் என அச்சம் எழுந்துள்ளது. நேபாளத்தின் பொருளாதாரத்தில் சுற்றுலா முக்கிய பங்கு வகிப்பதால், இதன் தாக்கம் பெரிதாக இருக்கலாம். மேலும் இந்த வழக்கு, எவரெஸ்ட் ட்ரெக்கிங் துறையில் அதிக வர்த்தகமயமாக்கல், கட்டுப்பாடுகள் குறைவு போன்ற பிரச்சனைகளையும் வெளிப்படுத்தியுள்ளது. தற்போது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் முன்வர வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# திருமணத்திற்குப் பின் சாதகமான மாற்றங்கள் காணும் ராசிகள்!



ஜோதிடத்தில் ஒவ்வொரு ராசிக்கும் தனித்துவமான குணாதிசயங்கள் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. மேலும், அனைத்து ராசியினரும் தங்கள் பண்புகளுக்கு ஏற்ப, வாழ்க்கை பயணத்தை அணுகி, தங்கள் எதிர்காலத்தை கட்டமைக்கின்றனர். அந்த வரிசையில், திருமணத்திற்கு பின் தங்கள் எதிர்காலத்தை சுபிக்ஷமாக மாற்றும் திறன் படைத்த ராசிகள் எது? திருமணத்திற்கு பின் இவர்களின் வாழ்க்கை எப்படி சிறப்பாக மாறும் என்பது குறித்து பார்ப்போம்!

**சிம்மம்!**

சிம்ம ராசியில் பிறந்தவர்கள் – குறிப்பாக, சிம்ம லக்னத்தில் பிறந்த பெண்கள் – அடிப்படையில் அதிர்ஷ்டத்தின் அடையாளமாக பார்க்கப்படுகின்றனர். கணிப்புகள் படி, திருமணத்திற்கு பின் தனது வாழ்க்கை துணையின் அதிர்ஷ்டத்தை அதிகரிக்கும் ஒரு நபராக இவர்கள் பார்க்கப்படுகின்றனர். அதேநேரம், தனது வாழ்க்கை துணையின் வெற்றிக்கு படியாய் நின்று, அவருடன் இணைந்து தனது வெற்றியையும் இவர்கள் உறுதி செய்கின்றனர். அந்த வகையில் திருமணத்திற்கு பின் இவர்களது வாழ்க்கையும் பிரகாசமாக மாறுகிறது!

**துலாம்!**

சுக்கிரனை ஆளும் அதிபதியாக கொண்ட துலாம் ராசியினர், அடிப்படையில் படைப்பாற்றல் அதிகம் கொண்டவர்கள். தங்கள் தனித்துவமான திறமைகள் மூலம், எதிர்பார்ப்புக்கும் அதிகமான வெற்றிகளை தங்கள் வாழ்க்கையில் கொண்டு வரும் நபர்கள். கிரக நிலை கணிப்பாளர்கள் கூற்றுப்படி, திருமணத்திற்கு பின்னர் இவர்களின் வாழ்கை பிரகாசமாக மாறுவதற்கு வாய்ப்பு அதிகம். தனது வாழ்க்கை துணையின் உதவியுடன் புதிய தொழில் தொடங்குவார்கள், தொழில் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை இரண்டிற்கும் இடையே சமநி லையை உண்டாக்கி, ஆரோக்கியமான வெற்றியை உறுதி செய்வார்கள்.

**ரிஷபம்!**

ரிஷப ராசியினர் தங்கள் உள்ளுணர்வுக்கு மதிப்பு அளித்து செயல்படுபவர்கள். ஆழ்ந்த சிந்தனையாளர்கள், நிலையான வெற்றியை தேடிச் செல்பவர்கள். ரிஷப ராசி கொண்டவர்களின் லட்சியங்கள் பெரும்பாலும் அவர்களின் திருமணத்திற்கு பின்னரே நிறைவேறுகிறது. அதற்கு காரணம், வாழ்க்கை துணையின் ஆதரவு மற்றும் ஊக்கம் என நம்பப்படுகிறது. கடின உழைப்புக்கு பெயர் பெற்ற இவர்களின், முயற்சிகள் பெரும்பாலும் அவர்களின் திருமணத்திற்கு பின் வெற்றி காண்பதாகவும் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**மகரம்!**

மாற்றத்தை விரும்பும் மகர ராசியினர், உண்மையில் உணர்வுகளுக்கும் – உறவுகளுக்கு மதிப்பு அளிப்பவர்கள். தனது வாழ்க்கை துணைக்கு உற்ற பாதுகாவலராக இருக்கும் இவர்கள், திருமணத்திற்கு பின் தனது வாழ்க்கை துணையின் உதவியுடன் தங்கள் வாழ்க்கையில் எண்ணற்ற சாதனைகளை செய்கின்றனர். ஊர் மெச்சும் தம்பதியர் எனும் பெயர் எடுக்கின்றனர். உண்மை, நேர்மை, தன்மை போன்றவை இவர்களிடம் காணப்படும் தனித்துவமான பண்புகள் ஆகும்.

**கடகம்!**

கடக ராசியினர் அடிப்படையில் கருணை உள்ளம் கொண்டவர்கள். தங்கள் செயல்பாடுகள் ஒருபோதும் மற்றவர்களை காயப்படுத்தும் வகையில் அமைவது கூடாது எனும் கருத்தில் உறுதியாக இருப்பவர்கள். குடும்ப வாழ்க்கையை பொறுத்தவரையில் உறவுகளுக்கு இடையே வலுவான பிணைப்பை உண்டாக்க வேண்டும் என்பது கடக ராசியினரின் விருப்பம்ஆகும். அவர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் விதமாகவே, சூழ்நிலைகள் அவர்களுக்கு அமையும். திருமணத்திற்கு பின்னர், சூழ்நிலைகள் அவர்களுக்கு சாதகமாக மாறும், எதிர்பார்த்த வெற்றிகளையும் அவர்கள் வாழ்க்கையில் கொண்டு வரும்!

**மீனம்!**

ஆழ்ந்த சிந்தனையாளர்கள், கடுமையாக உழைப்பவர்கள். எதிர்காலம் தொடர்பான தெளிவான சிந்தனைகள் மற்றும் செயல்திட்டங்களை கொண்டிருக்கும் நபர்கள். நிலையான வெற்றியை நோக்கி பயணிக்கும் இவர்கள், திருமணத்திற்கு பின்னர் தனது வெற்றியுடன் தன்னை சார்ந்து இருப்பவர்களின் வெற்றியையும் உறுதி செய்கின்றனர். கணவன் – மனைவி என இருவரும் ஒன்றாக இணைந்து, சாதனைகள் பல செய்து ஊர் போற்றும் தம்பதியராய் பெயர் எடுப்பார்கள்.



திண்டுக்கல்லில் அதிமுகவை சேர்ந்த 100–க்கும் மேற்பட்டோர் அந்தக் கட்சியிலிருந்து விலகி திமுக வேட்பாளர் செந்தில்குமார் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். திண்டுக்கல் மாநகராட்சி 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் மார்த்தாண்டன் ஏற்பாட்டின் பேரில் மேட்டுப்பட்டி பகுதியை சேர்ந்த அதிமுக பிரதிநிதி சுமதி தலைமையில் ஆண்கள் பெண்கள் உட்பட 100–க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இருந்து விலகி மேட்டுப்பட்டி காளியம்மன் கோவில் பிரசாரத்துக்கு வருகை தந்த திமுக கிழக்கு மாவட்ட செயலாளரும் திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளருமான செந்தில்குமார் தலைமையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். மேலும் அதிமுக சார்பில் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வேட்பாளர் செந்தில்குமாரிடம் வழங்கினர்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## வெயில் காலத்தில் உயிரை பறிக்கும் ஹீட் ஸ்ட்ரோக்.. வராமல் தப்பிப்பது எப்படி?



வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், மக்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பகல் நேரங்களில் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, கடுமையான வெப்பம் காரணமாக உடலில் நீர்ச்சத்து குறைவு, சோர்வு, தலைச்சுற்றல் போன்ற பல்வேறு உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது.

ஹீட் ஸ்ட்ரோக் அபாயம்: கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், 'ஹீட் ஸ்ட்ரோக்' அபாயமும் அதிகரித்துள்ளது. உடலில் நீர்ச்சத்து குறைவது, அதிக வெப்பநிலை தாக்கம் மற்றும் தேவையான முன்னெச்சரிக்கை இல்லாமை போன்றவை ஹீட் ஸ்ட்ரோக் ஏற்பட முக்கிய காரணங்களாகும். இந்த நிலை உருவானால், உடல் வெப்பநிலை திடீரென உயர்ந்து, தலைச்சுற்றல், மயக்கம் போன்ற தீவிர பிரச்சனைகள் ஏற்படக்கூடும். எனவே, கோடை காலத்தில் போதுமான தண்ணீர் குடித்தல், வெயிலில் நீண்ட நேரம் இருப்பதை தவிர்த்தல், லேசான ஆடைகள் அணிதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் நம்மை பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது.

**ஹீட் ஸ்ட்ரோக்கை தவிர்ப்பது எப்படி?**

மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி, காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை சூரியக் கதிர்களின் தாக்கம் மிகவும் தீவிரமாக இருக்கும் என்பதால், இந்த நேரத்தில் வெளியே செல்வதை தவிர்க்க வேண்டும். அவசியமான சூழ்நிலைகளில் வெளியே செல்ல வேண்டியிருந்தால், தொப்பி, கூலிங் கிளாஸ், ஸ்கார்ஃப் அல்லது குடை போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

நேரடி சூரிய ஒளியில் நீண்ட நேரம் இருப்பது உடல் வெப்பநிலையை அதிகரித்து, உடல்நலப் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால், முடிந்தவரை நிழலில் இருக்கவும், உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கவும்.

கோடை காலத்தில் அதிகமான வெப்பம் காரணமாக, வியர்வை மூலம் உடலில் இருந்து நீர் அதிகளவில் வெளியேறுகிறது. இதனால், Dehydration எனப்படும் நீர்ச்சத்து குறைபாடு ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது. இதனைத் தவிர்க்க, நாள் முழுவதும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பது அவசியம்.

எலுமிச்சை ஜூஸ், மோர், இளநீர், பழச்சாறுகள் போன்ற திரவ உணவுகள் உடலுக்கு குளிர்ச்சியையும், தேவையான நீர்ச்சத்தையும் வழங்குகின்றன. அதே நேரத்தில், காஃபின் மற்றும் அதிக சர்க்கரை கொண்ட பானங்களை தவிர்ப்பது நல்லது. இவை உடலில் நீர்ச்சத்தை குறைக்கும் வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

கோடை காலத்தில் உடலை வெப்பத்திலிருந்து பாதுகாக்க, ஆடை மற்றும் உணவு முறைகளில் மாற்றம் அவசியம். மெல்லிய, தளர்வான மற்றும் பருத்தி ஆடைகளை அணிவது உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கும். குறிப்பாக, அடர் நிற ஆடைகளைத் தவிர்த்து, வெளிர் நிற ஆடைகளை அணிவது வெயில் தாக்கத்தை குறைக்க உதவும்.

எளிதில் ஜீரணமாகக்கூடிய மற்றும் அதிக நீர்ச்சத்து கொண்ட உணவுகளை எடுத்துக்கொள்வது நல்லது. தர்பூசணி, வெள்ளரிக்காய், ஆரஞ்சு போன்ற பழங்கள் உடலுக்கு தேவையான குளிர்ச்சியையும் நீர்ச்சத்தையும் வழங்குகின்றன.

காரமான மற்றும் அதிக எண்ணெய் கொண்ட உணவுகளைத் தவிர்ப்பது முக்கியம். இவ்வகை உணவுகள் உடல் வெப்பநிலையை உயர்த்தக்கூடும் என்பதால், அவற்றை குறைப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது.

ஹீட் ஸ்ட்ரோக் அறிகுறிகள்: ஒருவருக்கு ஹீட் ஸ்ட்ரோக் ஏற்பட்டால்,

- தலைச்சுற்றல்
- தலைவலி
- குமட்டல்
- சருமம் அதிகமாக சூடாக மாறுதல்
- கடுமையான சோர்வு

போன்ற அறிகுறிகள் தென்படலாம். இத்தகைய அறிகுறிகள் தெரிந்தவுடன், பாதிக்கப்பட்ட நபருக்கு தண்ணீர் அல்லது எலக்ட்ரோலைட் பானங்கள் கொடுத்து உடல் வெப்பத்தை குறைக்க முயற்சிக்க வேண்டும். அறிகுறிகள் தீவிரமாக இருந்தால், தாமதிக்காமல் மருத்துவரை அணுகுவது அவசியம். இந்த நிலையை புறக்கணித்தால், உடல்நிலை மோசமடையும் அபாயம் உள்ளது.



தேனி மாவட்டத்தில் நூறு சதவீதம் ஓட்டுபதிவை வலியுறுத்தி மாற்றுதிறனாளிகள் பங்கேற்ற மூன்றுசக்கர வாகன விழிப்புணர்வு ஊர்வலம் தேனி–அல்லிநகரம் நகராட்சி அலுவலத்தில் தொடங்கியது. மாவட்ட தேர்தல் அலுவலர் ரஞ்ஜித்சிங் ஊர்வலத்தை தொடங்கிவைத்தார். மூன்றுசக்கர வாகனத்தில் ஓட்டுப் பதிவை வலியுறுத்தி ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.டி.ஆர்.ஓ.ராஜகுமார் முன்னிலை வகித்தார். மாவட்ட மாற்றுதிறனாளிகளின் நல அலுவலர் காமாட்சி மகளிர் திட்ட இயக்குனர் சந்திரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மதுரை சித்திரை திருவிழா 2026 அட்டவணை: எந்த நாளில் என்ன வைபவம்?



2026 மதுரை சித்திரை திருவிழா எப்போது தொடங்குகிறது, எந்த நாட்களில் என்னென்ன நிகழ்வு நடைபெறுகிறது உள்ளிட்ட முழு விவரம்.

**முழு சித்திரை திருவிழா அட்டவணை**

| நாள் | தேதி | கிழமை | வைபவம் |
|---|---|---|---|
| ---- | ஏப்ரல் 18, 2026 | சனிக்கிழமை | வாஸ்து சாந்தி பூஜை |
| நாள் 1 | ஏப்ரல் 19, 2026 | ஞாயிற்றுக்கிழமை | சித்திரை திருவிழா கொடியேற்றம், கற்பக விருட்சம், சிம்ம வாகனம் |
| நாள் 2 | ஏப்ரல் 20, 2026 | திங்கட்கிழமை | பூத வாகனம், அன்ன வாகனம் |
| நாள் 3 | ஏப்ரல் 21, 2026 | செவ்வாய்க்கிழமை | கைலாச பர்வதம், காமதேனு வாகனம் நாள் 4 ஏப்ரல் 22, 2026 |
| நாள் 4 | ஏப்ரல் 22, 2026 | புதன்கிழமை | தங்க பல்லக்கு |
| நாள் 5 | ஏப்ரல் 23, 2026 | வியாழக்கிழமை | தங்க குதிரை வாகனம், வேடர் பாரி லீலை |
| நாள் 6 | ஏப்ரல் 24, 2026 | வெள்ளிக்கிழமை | தங்க ரிஷபம், வெள்ளி ரிஷபம் |
| நாள் 7 | ஏப்ரல் 25, 2026 | சனிக்கிழமை | நந்திகேஸ்வரர், யாளி வாகனம் |
| நாள் 8 | ஏப்ரல் 26, 2026 | ஞாயிற்றுக்கிழமை | மீனாட்சி பட்டாபிஷேகம், வெள்ளி சிம்ஹாசன உலா |
| நாள் 9 | ஏப்ரல் 27, 2026 | திங்கட்கிழமை | மீனாட்சி திக் விஜயம், இந்திர விமான உலா |
| நாள் 10 | ஏப்ரல் 28, 2026 | செவ்வாய்க்கிழமை | மீனாட்சி சுந்தரேஸ்வர் திருக்கல்யாணம், யானை வாகனம், புஷ்ப பல்லக்கு |
| நாள் 11 | ஏப்ரல் 29, 2026 | புதன்கிழமை | மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருத்தேரோட்டம், கள்ளழகர் தங்க பல்லக்கு புறப்பாடு |
| நாள் 12 | ஏப்ரல் 30, 2026 | வியாழக்கிழமை | கள்ளழகர் எதிர் சேவை |
| நாள் 13 | மே 1, 2026 | வெள்ளிக்கிழமை | கள்ளழகர் தங்க குதிரை வாகனத்தில் வைகை ஆற்றில் எழுந்தருளல் |
| நாள் 14 | மே 2, 2026 | சனிக்கிழமை | தசாவதாரம் திருக்கோலம் |
| நாள் 16 | மே 4, 2026 | திங்கட்கிழமை | புஷ்ப பல்லக்கில் கள்ளழகர் திருமாலிருஞ்சோலை புறப்பாடு |
| நாள் 17 | மே 5, 2026 | செவ்வாய்க்கிழமை | கள்ளழகர் திருமாலிருஞ்சோலை வந்து சேருதல் |

இதில், கொடியேற்றம், மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், மீனாட்சி திக் விஜயம், மீனாட்சி சுந்த ரேஸ்வரர் திருக்கல்யாணம், கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம், கள்ளழகர் எதிர் சேவை ஆகியவை முக்கிய நிகழ்வுகளாகும்.

## புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதிகளில் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் தனது தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்!

விராலிமலை, ஏப். 03–

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் தமிழக முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சரும் விராலிமலை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் டாக்டர்.சி.விஜய பாஸ்கர் போட்டியிடுகிறார்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதி மேற்கு, தெற்கு ஒன்றியத்துக்குட்பட்ட கல்குடி, பூதகுடி, கத்தலூர், வடக்குப்பட்டி, ஆண்டியப்பிள்ளை பட்டி, உள்ளிட்ட 59 க்கும் மேற்பட்ட பகுதிகளில் வேட்பாளர் டாக்டர். சி.விஜயபாஸ்கர் தனது தேர்தல் பரப்புரையை மேற்கொண்டார்.அப்போது அவருடன் பார்வர்டு ப்ளாக் கடசி நிறுவனர் முருகன் ஜி உடன் வந்தார்.அவர் செல்லும் இடமெல்லாம் அப்பகுதி பொதுமக்கள் ஆரத்தி எடுத்து பூரண கும்ப மரியாதை செய்து பொன்னாடை போற்றி வரவேர்த்தனர். பின்னர் அவர் பேசுகையில் "அதிமுக ஆட்சியில் தான் புதுக்கோட்டைக்கு மருத்துவக் கல்லூரி கொண்டுவரப்பட்டது. தாலிக்கு தங்கம் லேப்டாப் விலையில்லா சைக்கிள் உள்ளிட்ட எண்ணற்ற பல திட்டங்கள் கொண்டு வரப்பட்டது அதனை விடியா தி மு க தடுத்துவிட்டது இந்த நிலையில் வரும் சட்டமன்ற தேர்தலில் அதிமுக பெருவாரியான வெற்றி பெற்று தமிழகத்தின் முதல்வராக புரட்சித் தமிழர் எடப்பாடியார் மீண்டும் அமர வேண்டும் அதற்கு நீங்கள் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நாகராஜன், பழனியாண்டி உள்ளாட்ட ஒன்றிய நிர்வா கிகள் கூட்டணி கட்சியினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





தேனி வடக்கு மாவட்டம் பி.சி.பட்டி பேரூராட்சி தலைவர் மிதுன் சக்கரவர்த்தி ஏற்பாட்டில் பி.சி.பட்டி பேருராட்சியில் முக்கிய பிரமுகர்களிடம் போடி சட்டமன்ற தொகுதி தி.மு.க.வேட்பாளர் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன்எம்.பி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி கணேசன் பேரூர் செயலாளர் செல்வராஜ் ஆகியோர் முக்கிய பிரமுகர்களிடமும், சமுதாய பிரமுகர்களிடமும் வர்த்தக பிரமுகர்களிடமும் தி.மு.க.விற்கு ஆதரவு அளிக்கும்படி கேட்டு கொண்டனர்.

## சட்ட தன்னார்வலர்கள் பணிக்கு விண்ணப்பிக்க அழைப்பு!

புதுக்கோட்டை, ஏப். 03–

மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் (W.P.(C) No.427/2022 Titled Bachpan Bachao Andolan Vs. Union Of India & Others) மற்றும் தமிழ்நாடு அரசு, உள்துறை (காவல்துறை–XII) அரசாணை (நிலை) எண். 130–ன் படி, புதுக்கோட்டை மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம் (DISA) மூலமாக காவல் நிலையங்களில், "காணாமல் போன குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளில்' உதவி புரிய சட்ட உதவி தன்னார்வலர்கள் (PLVS) தேர்வு செய்யப்பட உள்ளனர்.

**1. தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

கல்வித் தகுதி குறைந்தபட்சம் 12–ஆம் வகுப்பு (Plus Two) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**வயது வரம்பு:**

25 முதல் 55 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்..

ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், மருத்துவர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் (NGOs) பணியாற்றுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சமூகப்பணி (Social Work), உளவியல் (Psychology) அல்லது அது சார்ந்த துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**2. தன்னார்வலர்களின் கடமைகள்:**

காணாமல் போன குழந்தைகளின் பெற்றோருக்கு விசாரணை சமயத்தில் வழிகாட்டுதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்,

காவல் நிலைய அதிகாரிகளுக்கும் (SHO) பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்படுதல்.

மீட்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான அரசு நலத்திட்டங்கள் மற்றும் இழப்பீடுகளைப் பெற்றுத் தர உதவுதல்.

குழந்தை தொழிலாளர் முறை மற்றும் குழந்தை திருமணத் தடைச் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் உதவிகளை மேற்கொள்ளுதல்.

**3. மதிப்பூதியம் மற்றும் பணிக்காலம்:**

மதிப்பூதியம்: ஒரு வருகைக்கு (Per Visit) ரூ. 1,000/– வீதம் வழங்கப்படும்.

ஒரு வழக்குக்கு அதிகபட்சமாக ரூ.5,000/– வரை மதிப்பூதியம் வழங்கப்படும்.

பணிக்காலம்: முதற்கட்டமாக ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப்படுவார்கள். செயல்பாடுகளின் அடிப்படையில் பணிக்காலம் நீட்டிக்கப்படும்.

**4. தேர்வு முறை:**

விண்ணப்பதாரர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் செயலாளர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் அடங்கிய குழுவால் நேர்காணல் செய்யப்பட்டு தேர்வு செய்யப்படுவார்கள். விண்ணப்ப படிவம் மற்றும் முழு விபரம் https://pudukkottai.dcourts.gov.in/ என்ற இணையதளத்தில் "Notification" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விருப்பமுள்ள தகுதிவாய்ந்த நபர்கள் மேற்படி இணையதள விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதனை முறையாக பூர்த்தி செய்து வரும் 20.04.2026–ம் தேதி மாலை 05.00 மணிக்குள் "தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம், புதுக்கோட்டை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் கோரப்படுகிறது. இறுதி நாளுக்கு பிறகு பெறப்படும் விண்ணபங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தகுதியான விண்ணப்பங்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் வரும் 29.04.2026–ம் தேதி 4.30 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குள் இருக்கும் சமரச தீர்வு மைய அலுவலகத்தில் (ADR Building) நேர்முகத்தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படவுள்ளனர் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பு: மேற்காணும் பணிக்கு சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் வழங்கப்படாது, சேவை மனப்பான்மை உள்ளவராக இருத்தல் வேண்டும், பகுதி–3ல் குறிப்பிட்டுள்ளபடி மதிப்பூதியம் (Honorarium) மட்டும் வழங்கப்படும்.

இடம்: புதுக்கோட்டை

நாள்: 01.04.2026.

K.பூரண ஜெய ஆனந்த்.,
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம், புதுக்கோட்டை.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


## வேலை வாய்ப்பு
### சசாஸ்த்ரா சீமா பால் – 233 தலைமைக் காவலர் காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: சஷஸ்த்ர சீமா பல்

அறிவிப்பு எண்: 524/RC/SSB/Combined Advt./CT to SI (Non GD)/ 2025

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 233 தலைமைக் காவலர் (ஸ்டீவர்ட்), தலைமைக் காவலர் (தகவல் தொடர்பு), தலைமைக் காவலர் (மின்சாரப் பணியாளர்), தலைமைக் காவலர் (கால்நடை) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 21.03.2026

கடைசி தேதி: 20.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssb.gov.in/

## பழனியில் தமிழ்நாடு பிராமண சமாஜம் கூட்டம்!




பழனி, ஏப். 03–

பழனியில் தமிழ்நாடு பிராமண சமாஜம் கூட்டம் நடைபெற்றது. பழனியில் தமிழ்நாடு பிராமண சமாஜம் கூட்டம், மாநிலத் தலைவர் கண்பத் கிரேண்ட் ஹோட்டல் அதிபர் என் ஹரிஹர முத்து தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில செயலாளர் ரமேஷ் குமார், மாநிலத் தேர்தல் அலுவலர் வழக்கறிஞர் அனிருத் கர்கா, பழனி கிளை தலைவர் சுந்தரேச குருக்கள், கிளைச் செயலாளர் சங்கரநாராயணன், முன்னாள் கிளை தலைவர் பாலசுப்பிரமணியம், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு பிராமண சமாஜம் மாநில தலைவர் ஹரிஹர முத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பிராமண சமூகத்தின் அடிப்படை நிலைப்பாடு தெளிவானது. தமிழ்நாட்டின் நலனையும், தமிழ்நாட்டின் நீண்ட காலம் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டும், பாரதிய ஜனதா தலைமையிலான, தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு அளிக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பிராமண சொந்தங்கள் வாக்களிக்க வேண்டும். சனாதன தர்மத்திற்கு எதிராக செயல்படும் கட்சிகளை புறக்கணிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## சோழவந்தான் தொகுதி காரியாலயம் திறப்பு!



சோழவந்தான், ஏப். 03–

மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளராக போட்டியிடும் மக்களின் மருத்துவர் பாலமுருகன் சமயநல்லூரில் தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார்.

அப்போது நிர்வாகிகள் மாற்றுக் கட்சியினர் குறிப்பாக அமமுக தமிழக வாழ்வுரிமைக் கட்சி அதிமுக உரிமை மீட்பு குழு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு நிர்வாகிகள் வேட்பாளர் பாலமுருகனுக்கு தங்களி ன் முழு ஆதரவை அளித்து வெற்றி பெற பாடுபட போவதாக கூறினர் தொடர்ந்து சோழவந்தான் தொகுதியின் வெற்றி குறித்து ஆலோசனை கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

## ஆலங்குடியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம்!



புதுக்கோட்டை, ஏப். 03–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளராக அமைச்சர் மெய்ய நாதன் அறிவிக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து ஆலங்குடி ஆர்.கே.மஹாலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் அமைச்சர் ரகுபதி, அமைச்சர் மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்டு அனைத்து நிலை நிர்வாகிகளை சந்தித்து ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் வெற்றிக்கான கருத்துக்களை எடுத்துரைத்து,'திராவிட மாடல்' அரசின் சாதனை திட்டங்களை இல்லம் தோறும் சென்று பிரச்சாரப் பணியில் ஈடுபட்டும், மத்திய பாசிச பாஜக அரசின் தமிழ்நாட்டிற்கும் இழைக்கும் அநீதியை மக்கள் மத்தியில் கொண்டு சென்று பெரு வாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.






## அனல் பறக்கும் தேர்தல் களம்..!



# தமிழ்நாடு முழுவதும் தேர்தல் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கை: தேர்தல் ஆணையம்!



சென்னை, ஏப். 03–

தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலின் ஒரு பகுதியாக, வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு (ஸ்வீப்) திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாக்காளர்களின் விழிப்புணர்வை அதிகரிப்பது, தகவல் அறிந்த மற்றும் தார்மீக அடிப்படையிலான வாக்களிப்பை ஊக்குவிப்பது மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடையே முழுமையான தேர்தல் பங்கேற்பை உறுதி செய்வதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள், சட்டமன்ற தொகுதிகள் அளவில் இந்த முன்னெடுப்புகளைத் தீவிரமாக செயல்படுத்தி வருகின்றனர். மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. ஸ்வீப் திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான 1,486 நிகழ்ச்சிகளும், 22,130 சிறிய அளவிலான நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான நிகழ்ச்சிகளாக, மாரத்தான் போட்டிகள், மனிதச் சங்கிலிகள், வாக்காளர் உறுதிமொழிப் பிரசாரங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள தேர்தல் எழுத்தறிவு சங்கங்களின் செயல்பாடுகள் ஆகியவை அடங்கும். ஒவ்வொரு மாவட்டமும் தனித்துவமான சின்னங்களை உருவாக்கி, அவற்றின் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு செய்திகளைத் திறம்பட பரப்பி வருகின்றன.

அதில், வாக்களிப்பதன் முக்கியத்துவம், நேர்மையான வாக்களிப்பு ஆகியவை முக்கியப்படுத்தப்படுகின்றன. மேலும், முதல்முறை வாக்காளர்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், நலிந்த பிரிவினர் ஆகியோரை மையப்படுத்தி விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜகா வாங்கினால் போதுமா: வசூலித்த பணத்தை திரும்பத் தர வேண்டாமா: கமல் கட்சியினர் புலம்பல்!



சென்னை, ஏப். 03–

தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பி விருப்ப மனு கொடுத்த கமல் கட்சியினர், இப்போது விண்ணப்பக் கட்டணத்தை திரும்ப கேட்கின்றனர்.

நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமல்ஹாசனுக்கு ஒரு ராஜ்யசபா சீட் கொடுத்து திமுக தன் வசப்படுத்தியது. அதுமட்டுமின்றி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டும் திமுக கட்டளையிட்டதால், தன் விருப்பமின்மையை வெளிப்படுத்தும் வகையில், '' தேர்தலிலேயே போட்டியிடவில்லை'' என்று ஜகா வாங்கிவிட்டார். கமல் எடுத்த முடிவு, அக்கட்சியின் நிர்வாகிகள் மத்தியில் பரவலான ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக தேர்தல் நெருங்குவதை கருத்தில் கொண்டு, தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சி உறுப்பினர்களிடம் இருந்து மக்கள் நீதி மய்யம் விண்ணப்பங்களை வரவேற்றிருந்தது. விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. இத்தொகை, மாநிலத்தில் உள்ள பிற அரசியல் கட்சிகள் வசூலிக்கும் கட்டணத்தை விட மிக அதிகம் என்று பல தொண்டர்கள் தங்களது குமுறலை வெளிப்படுத்தி இருந்தனர்.

ஆரம்பத்தில் இக்கட்டணம் குறித்துச் சில தயக்கங்கள் நிலவியபோதிலும் தமிழகம் முழுவதும் 60க்கும் மேற்பட்டோர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து உரிய கட்டணத்தையும் செலுத்தினர். கடைசியில், தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று கமல் வெளியிட்ட அறிவிப்பு, விண்ணப்பித்த பலரை மிகுந்த ஏமாற்றத்திற்கும் மனச்சோர்விற்கும் உள்ளாக்கியுள்ளது. அந்த அறிவிப்பில் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியவர்கள் குறித்தோ, பணம் திரும்ப வழங்கப்படும் என்பது குறித்தோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது குறித்து,மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள் கூறியதாவது: தேர்தல்களிலேயே போட்டியிடப்போவதில்லை என்றால், ஒரு அரசியல் கட்சியை நடத்துவதன் நோக்கம் என்ன? இம்முறை நமக்கு நிச்சயம் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்கும் என்று உறுதியாக நம்பி, எங்களில் பலரும் கடந்த சில ஆண்டுகளாகக் களத்தில் அயராது உழைத்தோம். கோவையை பொறுத்தவரை, தொண்டர்களின் எதிர்பார்ப்புகள் மிக அதிகமாக இருந்தன. ஏனெனில், திமுக தலைமையிலான கூட்டணியில் மக்கள் நீதி மய்யமும் அங்கம் வகிப்பதால், கோவை தெற்குத் தொகுதியில் வெற்றிபெறக் கட்சிக்கு வலுவான வாய்ப்பு இருப்பதாக தொண்டர்கள் உறுதியாக இருந்தனர். இப்போது தேர்தலில் போட்டியிடாத நிலையில் விண்ணப்ப கட்டணத்தை திரும்பத் தரவேண்டியது தானே முறை? அதை தராமலும், அது பற்றி எந்த அறிவிப்பும் வெளியிடாமலும் இருப்பது என்ன நியாயம்?

இவ்வாறு கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# மே.வங்க தேர்தலில் மம்தாவுக்கு இணையாக முக்கியத்துவம் பெறும் மருமகன் அபிஷேக்!



முதல்வர் மம்தாவுடன் அபிஷேக் பானர்ஜி

புதுடெல்லி, ஏப். 03–

மேற்கு வங்கத்தை ஆளும் திரிணமூல் காங்கிரஸின் (டிஎம்சி) இளைஞர் பிரிவு தலைவராக இருப்பவர் அபிஷேக் பானர்ஜி. மக்களவை எம்.பி.யான இவரை முதல்வர் மம்தா தனது வாரிசாக முன்னிறுத்தி வருகிறார். இதனால் கட்சியில் மம்தாவுக்கு அடுத்த நிலை தலைவராக அபிஷேக் முன்னிறுத்தப்படுகிறார். இந்நிலையில் 2026 தேர்தல் பிரச்சாரத்தில் முதல்வர் மம்தாவுக்கு இணையான தலைவராக அபிஷேக் உருவெடுத்துள்ளார். இருவரின் ஒருங்கிணைந்த தலைமை, மேற்கு வங்க அரசியலில் ஒரு தனித்துவமான அரசியல் நிலையை உருவாக்கியுள்ளது. முதல்வர் மம்தாவின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக அபிஷேக் மாறி வருகிறார். இது, மாநில தேர்தல் அரசியலில் மம்தாவின் மருமகன் அபிஷேக்கின் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது.

# கூட்டத்திற்கு நடுவே ஆம்புலன்ஸ்களை வேண்டுமென்றே அனுப்புகிறார்கள்; தவெக குற்றச்சாட்டு!



மதுரை, ஏப். 03–

திருப்பரங்குன்றம் த வெக வேட்பாளர் சி டி ஆர் நிர்மல் குமார் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழக வெற்றிக் கழகத் தலைவரின் திருச்சி கிழக்குத் தொகுதி வேட்புமனுத் தாக்கல் சிறப்பாகவும், எழுச்சியுடனும் நடைபெற்று முடிந்தது. திருச்சி முழுவதும் திரண்டு இருந்த லட்சக்கணக்கான தொண்டர்கள் மற்றும் பொதுமக்களின் உற்சாகம், தமிழகம் முழுவதும் ஒரு பெரிய மாற்றத்திற்கான அலை வீசுவதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. குறிப்பாக, செல்லும் இடமெல்லாம் 80 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் 'விசில்' சின்னத்திற்கே வாக்களிக்கத் தயாராக இருப்பதாகவும், தேர்தல் முடிவுகள் இதனை எதிரொலிக்கும்.

மத்திய அரசு சமீபத்தில் கொண்டு வந்த வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை சட்டத்திருத்தத்திற்கு (FCRA) தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறேன். இந்தச் சட்டம் ஒருதலைப்பட்சமாக சிறுபான்மை மக்களைப் பாதிக்கும் நோக்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக கோடிக்கணக்கான ஏழை மாணவர்களுக்குக் கல்வி வழங்கி வரும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களை முடக்கும் செயலாக இது உள்ளது, தேர்தல் முடிந்த பிறகு இதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்படும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான எந்த ஒரு செயலையும் தவெக அனுமதிக்காது.

தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் சென்னையில் தலைவரின் பிரச்சாரத்தின் போது காவல்துறை போதிய பாதுகாப்பு வழங்கவில்லை , ஆனால் திருச்சியில் காவல்துறையின் செயல்பாடுகள் ஓரளவுக்குத் திருப்திகரமாக இருந்தது.வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவது மற்றும் பாதுகாப்பு அரண்களை அமைப்பதில் அரசு இயந்திரம் நடுநிலையோடு செயல்பட வேண்டும் வரும் மே மாதம் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நிச்சயம் ஏற்படும் அப்போது கடமை தவறிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அமைதியாக இருந்த திருப்பரங்குன்றத்தில் தேவையற்ற கட்டுப்பாடுகளை விதித்து, மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் திமுகவும் பாஜகவும் அரசியல் செய்கிறது.தேர்தல் பரப்புரையின் போது ஆம்புலன்ஸ் வாகனங்கள் வேண்டுமென்றே இடையூறு செய்ய அனுப்பப்படுகிறது, இது போன்ற செயல்களைக் காவல்துறை முறையாகக் கண்காணிக்க வேண்டும். இவ்வாறு அவர்தெரிவித்தார்.

# மக்களவைத் தொகுதிகளை 816 ஆக அதிகரிக்க நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் ஏப்.16-ல் தொடக்கம்!




புதுடெல்லி, ஏப். 03–

மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 816 ஆக உயர்த்த வகை செய்யும் மசோதாக்களை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டம் ஏப்ரல் 16–ம் தொடங்குகிறது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் அமர்வு கடந்த ஜனவரி 28 முதல் பிப்ரவரி 13ம் தேதி வரை நடைபெற்றது. இதன் 2வது அமர்வு மார்ச் 9–ம் தேதி தொடங்கி நேற்றுடன் நிறைவடைந்தது. கடைசி நாளான நேற்று நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு மாநிலங்களவையில் பேசும்போது, ''அடுத்த சில வாரங்களில் நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத் தொடர் நடைபெறும். இதில் முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்படும்'' என்று தெரிவித்தார். இது தொடர்பாக மத்திய அரசு வட்டாரங்கள் கூறிய தாவது: நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத் தொடர் ஏப்ரல் 16–ம் தேதி தொடங்கி, 18–ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543–ல் இருந்து 816 ஆக அதிகரிக்க வகை செய்யும் மசோதாக்களை நிறைவேற்ற திட்டமிடப்பட்டு உள்ளது. இதன்மூலம் மகளிர் இடஒதுக்கீட்டு சட்டத்தை முன்கூட்டியே அமல்படுத்த முடியும்.

கடந்த 2023–ம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி மக்களவையில் மூன்றில் ஒரு பகுதி இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். புதிய மசோதாக்களின்படி மக்களவைத் தொகுதிகளின் இடங்கள் 816 ஆக அதிகரிக்கும். இதில் 273 இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# LPG சிலிண்டர் முன்பதிவு முறை மாற்றம்: வந்தாச்சு புதிய விதிமுறை, முழு விவரம்!




சென்னை, ஏப். 03–

ஏப்ரல் 2026 மாதத்திலும் எல்பிஜி (LPG) சிலிண்டர் பெறுவதில் நெருக்கடி தொடர்ந்து தான் வருகிறது; மறுபுறம் எண்ணெய் விற்பனை நிறுவனங்கள் 19 கிலோ எடையுள்ள பெரிய சிலிண்டர்கள் மற்றும் 5 கிலோ எடையுள்ள சிறிய சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையை உயர்த்தியுள்ளன. இதற்கிடையில், புதிய சிலிண்டர் மறுநிரப்பல் தொடர்பான 'கட்டாய காத்திருப்புக் காலம்' (lock–in period) தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. இது தவிர, இந்தியக் குடும்பங்கள் எல்பிஜி சிலிண்டரிலிருந்து பிஎன்ஜி இணைப்புக்கு (PNG) மாறுவதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதிகள் பிஎன்ஜி இணைப்பை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அங்குள்ள எல்பிஜி இணைப்புகள் துண்டிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பிஎன்ஜி உள்கட்டமைப்பு வசதிகள் உள்ள குடியிருப்புச் சங்கங்களுக்கு இத்தகைய கடுமையான விதிகள் பொருந்தும். மேலும், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எல்பிஜி சேவையைப் பெற, பயோமெட்ரிக் ஆதார் அங்கீகாரத்தை அரசு கட்டாயமாக்கியுள்ளத இதனிடையே ஏப்ரல் 2026ல் உங்கள் LPG சிலிண்டர்களை முன்பதிவு செய்வதற்கு அல்லது மீண்டும் நிரப்புவதற்கு முன் கவனிக்க வேண்டிய 4முக்கிய மாற்றங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

**1. எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான 45 நாட்கள் மற்றும் 25 நாட்கள் விதிகள்:**

மார்ச் மாதத்தில், எல்பிஜி (LPG) சிலிண்டரை மீண்டும் நிரப்புவதற்கான காத்திருப்புக் காலத்தை (lock–in period) அரசாங்கம் திருத்தியமைத்தது; முன்னதாக நடைமுறையில் இருந்த 21 நாட்கள் காத்திருப்புக் காலத்தை உயர்த்தப்பட்டது. எல்பிஜி இணைப்பு வகை எதுவாக இருந்தாலும், சிலிண்டர் முன்பதிவு செய்வதற்கான புதிய காத்திருப்புக் காலம் முறையே 45 நாட்கள் மற்றும் 25 நாட்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது, உங்களிடம் 14.2 கிலோ எடை கொண்ட சிலிண்டர் இணைப்பு இருந்தா லும் சரி அல்லது 5 கிலோ எடை கொண்ட சிலிண்டர் இணைப்பு இருந்தா லும் சரி, நகர்ப்புறங்களில் காத்திருப்புக் காலம் 25 நாட்களாகவும், கிராமப்புற நுகர்வோருக்கு 45 நாட்களாகவும் தொடரும்.

**2. LPG இணைப்புக்கான பயோமெட்ரிக் ஆதார் அங்கீகாரம்**

பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா (PMUY) பயனாளிகள் ஆதார் அடிப்படையிலான அங்கீகாரத்தைச் (authentication) செய்துகொள்வதை அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது. சமீபத்திய வழிகாட்டுதலின்படி, இதுவரை eKYC–ஐ நிறைவு செய்யாத LPG நுகர்வோருக்கு மட்டுமே இந்த eKYC தேவை பொருந்தும் என்று அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது. நீங்கள் PMUY சாராத ஒரு நுகர்வோராக இருந்து, ஏற்கனவே இந்தச் செயல்முறையை நிறைவு செய்திருந்தால், நீங்கள் மீண்டும் LPG பயோமெட்ரிக் ஆதார் அங்கீகாரத்தைச் செய்ய வேண்டிய அவசியமில்லை.

மேலும், PMUY பயனாளிகள் ஒவ்வொரு நிதியாண்டிலும் இதை ஒருமுறை மட்டுமே செய்தால் போதுமானது என்றும்; அதுவும், 7 முறை எரிவாயு நிரப்பிய பிறகு — 8–வது முறை எரிவாயு நிரப்பும்போது — இலக்கு சார்ந்த நேரடி மானியங்களைப் (DBT) பெறுவதற்காக மட்டுமே இதைச் செய்ய வேண்டும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், eKYC செயல்முறையை வீட்டிலிருந்தபடியே, எவ்விதக் கட்டணமும் இன்றி மிக எளிதாகவே செய்துகொள்ள முடியும்.

**3. எரிவாயு சிலிண்டர் இணைப்பு 3 மாதங்களுக்குப் பிறகு துண்டிக்கப்படும்:**

எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையில் ஏற்பட்டுள்ள இடையூறுகளுக்கு மத்தியில், எல்பிஜி சிலிண்டரை பிஎன்ஜி இணைப்பாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது. உள்நாட்டு பிஎன்ஜி மற்றும் சிஎன்ஜி போக்குவரத்திற்கு 100% விநியோகத்துடன் முன்னுரிமை ஒதுக்கீடு தொடர்கிறது என்றும், அதே நேரத்தில் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள தொழில்துறை மற்றும் வணிக நுகர்வோருக்கான விநியோகம் சராசரி நுகர்வில் சுமார் 80% ஆகப் பராமரிக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4. IGL, MGL, GAIL Gas மற்றும் BPCL போன்ற எரிவாயு விநியோக நிறுவனங்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் போன்ற வணிக நிறுவனங்களுக்கு PNG இணைப்புகளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்குமாறு அறிவுறுத்தி உள்ளது.

### விமானங்களில் விரும்பும் இருக்கைக்கான கட்டணத்தில்


# 60% இலவசம் உத்தரவை திரும்பப் பெற்றது மத்திய அரசு!



புதுடெல்லி, ஏப். 03–

விமானங்களில் விரும்பும் இருக்கையைப் பெற இனி மீண்டும் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும். முன்ன தாக அறிவித்த 60 சதவிகித இலவச இருக்கைகள் குறித்த உத்தரவை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது. விமானப் பயணங்க ளுக்கான பயணச்சீட்டுகள் பெற்ற பின் அதற்கான விருப்பமான இருக்கை தேர்வுகளுக்காக கூடுதல் கட்டணம் வசூலிக்கின்றன. இந்தக் கட்டணம் ரூ.200 முதல் ரூ2,100 வரை என வசூலிக்கப்படுகிறது.

முன்புற இருக்கைகள் மற்றும் கால்களை நீட்டி அமர்வதற்கான கூடுதல் இட வசதி போன்ற வசதிகளுக்காகவே இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த விவகாரத்தில் மத்திய அரசு இட்ட 60% இலவச இருக்கை கள் உத்தரவை தற்போது திரும்பப் பெற்றுள்ளது. விமானப் போக்குவரத்து ஒழுங்கு முறை அமைப்பான டிஜிசிஏ–வால் வெளியான இந்த உத்தரவு ஏப்ரல் 20–ம் தேதி முதல் அமலுக்கு வரவிருந்தது. மத்திய அரசின் இந்த உத்தரவுக்கு விமான நிறுவனங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வந்தன. இந்நிலையில், தனது அறிவிப்பை டிஜிசிஏ திரும்பப் பெற்றுக் கொண்டது. எனவே, விமானங்களில் விருப்ப இருக்கைகளுக்கான பழைய விதிமுறை தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது.



## சினிமா துளிகள்..!

### 32 ஆண்டுகளுக்கு பிறகு இணையும் சத்யஜோதி ஃபிலிம்ஸ் இளையராஜா கூட்டணி!




சத்யஜோதி நிறுவனத்தின் படத்துக்கு 32 ஆண்டுகளுக்கு பிறகு இசையமைக்கவுள்ளார் இளையராஜா.

சத்யஜோதி நிறுவனம் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'லெனின் பாண்டியன்'. இப்படத்தின் அனைத்து பணிகளும் முடிந்து வெளியீட்டுக்கு தயாராக இருந்தாலும், யார் இசையமைப்பாளர் என்பது தெரியாமல் இருந்தது. தற்போது இப்படத்தின் இசையமைப்பாளராக இளையராஜா பணிபுரிந்திருப்பதாக படக்குழு அறிவித்துள்ளது. பாலச்சந்திரன் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்தில் சிவாஜி கணேசனின் பேரன் தர்ஷன் நாயகனாக அறிமுகமாகிறார். அவருடன் கங்கை அமரன், ரோஜா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் வெளியீடு எப்போது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020